தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

தேதி: 05.02.2024

அன்புள்ள ஐயா அவர்களுக்கு,

வணக்கம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மலர்களின் இரகங்களையும், வண்ணங்களையும், அழகினையும் அதன் வணிக முக்கியத்துவத்தையும் உணர்த்தும் வகையில் கோவை மக்களின் பார்வைக்காக இதுவரை 5 முறை மலர் கண்காட்சியினை வெற்றிகரமாக நடத்தி உள்ளது. இத்தகைய பெருமைமிக்க நிகழ்வு 11 ஆண்டுகள் கழித்து 6வது முறையாக இந்த ஆண்டு நடைபெற இருக்கிறது

இதுகுறித்தான பத்திரிக்கையாளர் சந்திப்பானது, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்கள், தலைமையில் **நாளை (06.02.2024 – செவ்வாய்க்கிழமை) காலை 11.30 மணியளவில்** பல்கலைக்கழக துணைவேந்தர் சந்திப்பு அறையில் நடைபெறவுள்ளது.

எனவே, தங்களுடைய மேலான **நிருபர் மற்றும் புகைப்பட / காணொலி நிருபர்** இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, தங்களுடைய மேலான நாளிதழ் / தொலைக்காட்சி / பத்திரிகையில் செய்தியினை வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற தங்களுடைய மேலான ஒத்துழைப்பை நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி !

தங்கள் உண்மையுள்ள,

மக்கள் தொடர்பு அலுவலர்

பெறுநர்,
ஆசிரியர் / நிருபர் / புகைப்பட நிருபர் / காணொலி நிருபர்